# DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 37 / 2013

Deposition of PW2 / LW4

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சங்கர் |
| Father's / Husband Name | : | சுப்பையா |
| Village | : | சாப்டூர் |
| Taluk | : | பேரையூர், மதுரை மாவட்டம். |
| Calling | : | வனவர் (ஓய்வு) |
| Age | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01.06.2026.

1ம் எதிரி ஆஜர். 2,3 ம் எதிரிகள் இறப்பு

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் வருசநாடு வனச்சரகத்தில் வனவராக பணிபுரிந்து தற்போது ஓய்வில் உள்ளேன். கடந்த 23.11.2010 ம் தேதி வருசநாடு வனச்சரக அலுவலகத்தில் வனவராக பணியில் இருந்த போது வருசநாடு காவல் நிலையத்தில் இருந்து வந்த புகாரின் அடிப்படையில் நானும், வனச்சரகர் சண்முகவேல், லட்சுமனன் ஆகியோர் வருசநாடு காவல் நிலையத்திற்கு சென்றோம்.

2. வனத்துறையின் அனுமதியின்றி 22 தேக்கு கட்டைகள், 19 வேங்கை கட்டைகள் KL 64 9962 என்ற டெம்போ வண்டியில் பிடித்து வைத்திருந்தார்கள். இது தொடர்பாக சார்பு ஆய்வாளர் அப்துல் ரஹிம் தனியறிக்கை ஒன்றினை வனச்சரகர் சண்முகவேலிடம் கொடுத்தார். அன்றை தினமே 5.30 மணிக்கு எதிரிகள் அழகு , ஈஸ்வரன் ஆகியோர் வனச்சரகரிடம் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதில் நானும், லட்சுமனனும் சாட்சி கையொப்பம் போட்டோம். வனச்சரக அலுவலர் சண்முகவேல் வழக்கு தொடர்பாக என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 1ம் எதிரியை இந்த வழக்கு பதிவு செய்வதற்கு முன்பே தெரியும் என்றால் தெரியும். எதிரிகளை காவல் நிலையத்தில் தான் பார்த்தோம் அதற்கு முன்பு நாங்கள் அவரை பார்க்கவில்லை. வழக்கு தொடர்பாக கைப்பற்றப்பட்ட பொருட்களை நீதிமன்றத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல காண்பித்தோம். கைப்பற்றப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.5000 என குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளோமா என்றால் எனக்கு சரியாக நினைவில் இல்லை. எதிரி அழகு அந்த வாகனத்தின் உரிமையாளர் இல்லை என்றால் சரிதான். எதிரி வாகனத்தின் ஓட்டுநர் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது.

2. இந்த வழக்கிற்கும் வனத்துறைக்கும் நேரடி தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளை காவலர்கள் தான் பிடித்து எங்களிடம் ஒப்படைத்தார்கள் நாங்கள் பிடிக்கவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. பொய்யான புகாரினை பெற்று எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.06.04 15:48:08 +0530

Judicial Magistrate,
Andipatti.